//பாதுகாப்பான முறையில்//

**திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**மூ.மு. எண் 5578/அ1/2023 நாள். 19 .02.2024**

பொருள்: பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருவண்ணாமலை மாவட்டம் - செய்யாறு கல்வி மாவட்டம், மேலச்சேரி கோட்டுப்பாக்கம், அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ச.தமிழரசன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து அரசால் ஆணை வழங்கப்பட்டமை - பணிவரன்முறை ஆணை மற்றும் பணிப்பதிவேடு அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை:
1. திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.11937/அ1/2022 நாள்:12.10.2022
2. அரசாணை (ப) எண்.183, பள்ளிக்கல்வித் [ப.க.3(2)] துறை நாள்:24.11.2023
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 32977/ஜே / இ1 / 2023, நாள். 18.01.2024

******

திருவண்ணாமலை மாவட்டம், நெடுங்குணம், அரசு மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்த போது 09.06.2014 இல் காலமான திரு.ஏ.ஜி.சடகோபன் என்பவரின் வாரிசுதாரரான மகன் திரு. ச.தமிழரசன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை (1) இல் காணும் செயல்முறைகளின்படி, மேலச்சேரி கோட்டுப்பாக்கம், அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

தற்போது பார்வை (2) மற்றும் (3) இல் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளின்படி, மேற்காண் இளநிலை உதவியாளருக்கு தனியர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணிவரன்முறை ஆணையினை உரிய நடவடிக்கையின் பொருட்டு தனியரின் பணிப்பதிவேட்டுடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை மறு அஞ்சலில் அனுப்புமாறு மேலச்சேரி கோட்டுப்பாக்கம், அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு. பணிவரன்முறை ஆணை மற்றும் அசல் பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை.

19.02.2024

பெறுநர்,

தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
மேலச்சேரி கோட்டுப்பாக்கம்.

நகல்: மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி), செய்யாறு.

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.ஏ.ஜி.சடகோபன் என்பவரின் மகன் திரு.ச.தமிழரசன், இளநிலை உதவியாளராக பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித்[ப.க.3(2)] துறை**

**அரசாணை (ப) எண்.**183

**நாள் 24.11.2023**
திருவள்ளுவர் ஆண்டு 2054
**சோபகிருது, கார்த்திகை 8**
**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.032963/ஜே/இ1/2023, நாள் 07.09.2023.

********

**ஆணை:–**

திருவண்ணாமலை மாவட்டம், நெடுங்குணம், அரசு மேல்நிலைப்பள்ளியில், பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும் போது திரு.ஏ.ஜி.சடகோபன் என்பார், பணிக்காலத்தில் 09.06.2014 அன்று காலமானார் என்றும், அன்னாரின் மனைவி அவரது மகன் திரு.ச.தமிழரசன் என்பாருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 06.06.2016 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 14.07.1997 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.ச.தமிழரசன் என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்

பணியில் பள்ளிக்கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும், எனவே, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு நன்கு ஆய்வு செய்து, திருவண்ணாமலை மாவட்டம், நெடுங்குணம், அரசு மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும்போது பணிக்காலத்தில் காலமான திரு.ஏ.ஜி.சடகோபன் என்பவரின் வாரிசான அவரது மகன் திரு.ச.தமிழரசன் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

**பெறுநர்**
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை—6.
முதன்மைக் கல்வி அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.
தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
24/11/23